| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| MSSRF<br>Science for Sustainable Development | மாவட்டம் : | இராமநாதபுரம் | காலம்: | 15/06/2024 | முதல் | 19/06/2024 |
| | அறிக்கை எண் : | 048/ 2024 | வெளியீட்டு நாள்: | | 14/06/2024 | |

## இராமநாதபுரம் மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (09.06.2024 முதல் 13.06.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 19-06-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 09/06 | 10/06 | 11/06 | 12/06 | 13/06 | தேதி | நாள்-1 15/06 | நாள்-2 16/06 | நாள்-3 17/06 | நாள்-4 18/06 | நாள்-5 19/06 |
| 0.4 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 2 | 0 | 0 | 0 |
| 34 | 36 | 36 | 36 | 37 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 36 | 36 | 35 | 35 | 35 |
| 25 | 25 | 26 | 26 | 25 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 25 | 25 | 24 | 25 | 25 |
| 4 | 3 | 4 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 5 | 5 | 6 | 5 |
| 70 | 70 | 64 | 66 | 64 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 60 | 60 | 60 | 70 | 70 |
| 76 | 75 | 77 | 78 | 75 | | 40 | 50 | 50 | 50 | 50 |
| 12 | 14 | 19 | 12 | 7 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 20 | 22 | 26 | 26 | 26 |
| தென் மேற்கு | தெற்கு | தெற்கு | தெற்கு | தென் மேற்கு | காற்றின் திசை | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு | தென் மேற்கு |

### குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜூன் 16 தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 35°-36° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 24° - 25° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 20 முதல் 26 கி.மீ வேகத்தில், தென்மேற்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

### பொது ஆலோசனை:

### அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலைமுன்னறிவிப்பு (14 - 27 ஜூன் 2024):

### மழைப்பொழிவு :

14-06-2024 - 20-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் இயல்பை ஒட்டியே மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

21-06-2024 - 27-06-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் குறைவான மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

**அதிகபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 32° செல்சியஸ் முதல் 36° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் அதிகபட்ச வெப்பநிலையானது பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 34° செல்சியஸ் முதல் 38° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

14-06-2024 - 20-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பை ஒட்டியே காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

21-06-2024 - 27-6-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 24° செல்சியஸ் முதல் 28° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 20 முதல் 26 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், பருத்தி, கால்நடை.**

**மிளகாய்:**

நிலவும் பருவச்சூழ்நிலையில் மிளகாய் பயிரில் இலை சுருட்டு நோயின் தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகை நோயின் தாக்குதலால் மிளகாய் பயிரின் இலையின் நடு நரம்பு சுருண்டு, உருமாற ஆரம்பிக்கும், இலைகள் மிகச் சிறியதாகவும், சிறியளவு இடைக்கணுக்களுடன் வளர்ச்சிகுன்றி காணப்படும். பூ மொட்டுகள் பெரிய அளவை அடையும் முன் நின்று விடும்.

தாக்கப்பட்ட செடிகளை வேருடன் களைந்து புதைக்க வேண்டும் அல்லது எரிக்க வேண்டும்.

ஒரே பயிரை திரும்ப திரும்ப பயிரிடக் கூடாது. 2-3 வரிசை மக்காச்சோளம் அல்லது சோளத்தை வரப்பு பயிராகப யிரிட வேண்டும்.

இதனைக்கட்டுப்படுத்த பத்து லிட்டர் தண்ணீருக்கு 5கிராம் தையமெதாக்சம் அல்லது 10மிலி இமிடாக்ளோபிரைடு இவற்றில் ஏதேனும் ஒரு மருந்துடன் 10மில்லி ஒட்டும்பசை சேர்த்து கலந்து தெளிக்க வேண்டும்.

## பருத்தி:

பருத்தியில் உள்ள ஊட்டச்சத்து குறைபாட்டை சரி செய்ய ,பருத்தி பயிரிட்டுள்ள விவசாயிகள் விதைத்த நாளிலிருந்து 10-15 நாட்களுக்குள் நுண்ணூட்டச்சத்துக்களை இட வேண்டும். ஏக்கருக்கு 5 கிலோ பருத்தி நுண்ணூட்டம் அல்லது 20 கிலோ மெக்னீசியம்சல்பேட் உரத்தினை வைத்து நுண்ணூட்டசத்து குறைபாட்டினை நிவர்த்தி செய்யலாம்.

மேலும் மக்கிய தொழு உரத்துடன் ஏக்கருக்கு 2 கிலோ அசோஸ்பைரில்லம் மற்றும் 2 கிலோ பாஸ்போபாக்டீரியாவை கலந்து இடுவதன் மூலம் சிறந்த பயிர் வளர்ச்சியுடன் நல்ல மகசூலை பெறலாம்.

## கால்நடை:

கால் நடைவளர்க்கும் விவசாயிகளின் கவனத்திற்கு இந்த தருணங்களில் தங்களின் மாடுகளை கோமாரி எனும் கால்கானை வாய்க்கானை நோய் தாக்குவதற்கான வாய்ப்பு உள்ளது. இதன் காரணமாக பெரும் பொருளாதார சேதாரம் ஏற்பட வாய்ப்பு உள்ளது

ஆகையால் ஜூன் மாதத்தில் அருகில் உள்ள அரசு கால்நடை மருந்தகத்தை அணுகி தங்களது மாடுகளுக்கு கோமாரி எனப்படும் கால்கானை வாய்க்கானை நோய்க்கான தடுப்பூசியினை போட்டுக் கொள்ள வேண்டும்.

மேலும் நான்கு மாதத்திற்கு ஒரு முறை கோமாரி நோய்த் தடுப்பூசியை தவறாமல் போட வேண்டும்.